**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம். புள்ளிவிவரத் தகவல் தொகுப்புப் பிரிவு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது.

(இ) வேலைவாய்ப்பு-பயிற்சித்துறை இயக்குநர் அலுவலகத் திற்குப் பெருமளவில் வந்து குவிகின்ற பல்துறை வேலைவாய்ப்புகள் குறித்த தகவல்கள் தொடர்பான புள்ளிவிவரங்களைத் திறம்பட இயந்திர உதவியால் அட்டவணைப்படுத்தும் ஓர் ஏற்பாட்டினை இப்பிரிவு செயல்படுத்துகிறது. இத்தகைய புள்ளிவிவரத் தகவல்கள் விரைந்து முறைப்படுத்தப்பட்டுத் தொகுக்கப்படுகின்றன. ஆட்கள் இவற்றை அட்டவணைப்படுத்துவதற்காகும் காலதாமதம் இதனால் தவிர்க்கப்படுகிறது. மேலும் இதனால் வேலைவாய்ப்பு நிறுவனங் களின் பணிகள் மேம்படுகின்றன.

**கண்ணிழந்தோருக்குக் கடன் வசதிகள்**

*373 **வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கண்ணிழந்தோருக்கு வர்த்தக வங்கிகள் கடன் தரவேண்டு மென்று அரசு அவைகளைக் கோரியுள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** இப்படி கண் இழந்தோர்களில் தொழில் கல்வி படித்தவர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள். அவர் களுக்கு தனியார் தொழில்சாலையில் அரசு மூலம் வேலை தேடிக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் களுக்கு அப்படி வேலை கிடைக்காமல் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா ? கண் இழந்தோர்களில் தொழிற் பயிற்சி பெற்றவர் களுக்கு வேலை தரக்கூடிய முறையில் ஏதாவது தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசாங்கமே முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அண்மையில் நடைபெற்ற மகாநாட்டில் ‘ ஹாண்டிகாப்டு பீப்பிளுக்கு ’ இதுபோன்ற தொழிற் சாலை ஏற்படுத்தலாமா என்று ஒரு ஆலோசனையை மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது